**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081635

1. District மாவட்டம் : மதுரை
PS: காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு
Year: ஆண்டு : 2023
FIR No.: மு.த.அ. எண் : 1/2023
Date: நாள் : 24-3-202[3]

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்: Sec 7 of PC Act 198[8]
(ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: as amended by Preven[tion]
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: of Corruption (Amendm[ent]) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை : 23-3-2023 காலை சுமா[ர்] 10.30 மணியளவில்
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை : 24-3-2023 காலை சும[ார்] 9.45 மணியளவில்
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : நேரம் : 24-3-23 / 11.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : சுமார் 38 km தெற்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி : உதவி மின் பொறியாளர் அலுவலகம் விக்கிரமங்கலம், விக்கிரமங்கலத்தில் இருந்து செக்கானூரணி செல்லும் ரோட்டில்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு. முத்துகண்ணன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : முத்தையா
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 42/23
(d) Nationality : நாட்டினம்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் : துப்புரவு பணியாளர்
(g) Address : முகவரி : 3/120, தெற்கு தெரு, காடுபட்டி, வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. குணசேகரன், உதவி மின் பொறியாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகம், விக்கிரமங்கலம், மதுரை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 24-3-2023 | [signature] 24-3-23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 24-3-23 at 12.05 hrs.

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police No. எண் ……….
V4A, Madurai

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 24.03.2023-ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம், காடுபட்டி கிராமம், தெற்குதெருவைச் சேர்ந்த முத்தையா மகன் திரு.M.முத்துகணேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் M.முத்துகணேஷ், த/பெ. முத்தையா, 3/120, தெற்குத் தெரு, காடுபட்டி, வாடிப்பட்டி வட்டம், மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம், காடுபட்டி கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் 5-ம் வகுப்பு வரை படித்து விட்டு, காடுபட்டி பஞ்சாயத்து அலுவலகத்தில் துப்புரவு பணியாளராக வேலை செய்து வருகின்றேன். எனது தந்தை முத்தையா பெயரில் காடுபட்டி சர்வே எண் 426/1, 426/2, 426/3-ல் கதவு எண் 120-ல் 350 சதுரடி உள்ள ஆஸ்பெட்டாஸ் வீட்டை எனது தாயார் பேச்சிக்கு கடந்த 20.10.2021-ம் தேதியன்று சோழவந்தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 2490/2021-ன் கீழ் தானசெட்டில்மெண்ட பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். அதன் பேரில் வீட்டுவரி ரசீது, பட்டா ஆகியவற்றை என் அம்மா பெயருக்கு மாற்றம் செய்து விட்டோம். ஆனால், அந்த வீட்டில் உள்ள மின் இணைப்பு எண் 05-162-004-597 எனது தந்தை முத்தையா பெயரில் உள்ளது. அதனை எனது தாயார் பேச்சி பெயரில் மாற்றம் செய்ய, கடந்த 21.03.2023-ம் தேதியன்று விக்கிரமங்கலம் இ-சேவை மையம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பித்தேன். அந்த விண்ணப்பம் எண் 20005162023135 ஆகும். அதற்கான கட்டணம் ரூ.708/-ஐயும் ஆன்லைன் மூலம் செலுத்தி விட்டேன். பின்னர் 23.03.2023-ம் தேதியன்று காலை சுமார் 09.40 மணியளவில் என்னுடைய செல் போன் எண் 99434 21452-க்கு 94458 52910 என்ற எண்ணிலிருந்து என்னிடம் ஒருவர் பேசினார். அவர் என்னிடம், தான் விக்கிரமங்கலம் AE குணசேகரன் பேசுவதாகவும், பேச்சி பெயரில் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக வீட்டுப் பத்திரம் மற்றும் ஆவணங்களை எடுத்துக் கொண்டு, நேரில் வந்து தன்னை பார்க்குமாறு கூறினார். நானும் சரி என்று கூறிவிட்டு, அன்றைய தினம் சுமார் 10.30 மணியளவில் விக்கிரமங்கலம் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கு பணியில் இருந்த A.E. திரு. குணசேகரன் அவர்களை நேரில் பார்த்து, எனது தாயார் பேச்சி பெயரில் உள்ள ஆவணங்களைக் காண்பித்தேன். அவர் அதனைப் பார்த்து விட்டு

எல்லாம் சரியாக உள்ளது, பெயர் மாற்றம் செய்து தருகிறேன், அதற்கு மூவாயிரம் ரூபாய் கொடுங்கள் என்று கூறினார். உடனே நான், அவரிடம், ஏற்கனவே ஆன்லைனில் நான் பணம் கட்டிவிட்டேன், அது தவிர வேறு ஏதும் அரசுக்கு கட்டணமாக செலுத்த வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர், இல்லை, என்னுடைய செலவுக்கு மூவாயிரம் ரூபாய் கொடுத்தால் தான், நான் பெயர் மாற்றம் செய்து தருவேன் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். நான் எனது அம்மாவிடம் கேட்டு வருகின்றேன் என்று AE அவர்களிடம் சொல்லிவிட்டு, வீட்டிற்கு வந்து விட்டேன். பின்பு எனது அம்மாவிடம், EB பெயர் மாற்றம் செய்ய மூவாயிரம் ரூபாய் லஞ்சமா கேட்குறாங்க எனக் கூறினேன். அதற்கு அவர் நம்ம இருக்கிற கஸ்டத்துல எப்படி மூவாயிரம் ரூபாய் புரட்ட முடியும், அவரிடம் போய் பணத்தை கொஞ்சம் குறைக்குமாறு கேட்கச் சொன்னார்கள். அதனால் நான் இன்று 24.03.2023-ம் தேதி காலை சுமார் 09.45 மணியளவில் விக்கிரமங்கலம் AE ஆபிசுக்குச் சென்று, AE திரு.குணசேகரன் அவர்களை மீண்டும் நேரில் சந்தித்து, எனது தாயார் மின் இணைப்பு பெயர் மாற்றம் குறித்து கேட்டபோது, அவர் தான் கேட்ட மூவாயிரம் பணம் என்னாச்சு என்று கேட்டார். அதற்கு அவரிடம், நான் பஞ்சாயத்து அலுவலகத்தில் துப்புரவு வேலை செய்கின்றேன், ரொம்ப கஷ்டப்படுகிறேன், என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியாது, கொஞ்சம் குறைச்சு சொல்லுங்க சார் என்று கூறினேன். அதற்கு அவர் சரி ரூ.500 குறைத்துக் கொண்டு ரூ.2,500/- கொடுங்க, இதுக்கு மேலே என்னால குறைக்க முடியாது, ரூ.2,500/- உடனே கொண்டு வந்தால்தான் பெயர் மாற்றம் செய்து கொடுப்பேன், இல்லையென்றால் நீங்கள் அலைந்து கொண்டு இருக்க வேண்டும் என கண்டிப்பாக கூறிவிட்டார். நான் சரி என்று சொல்லிவிட்டு என்று வந்து விட்டேன். ஆனால், அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இது சம்பந்தமாக எனது தாயாரிடம் சொன்னேன். அவரும் வருத்தப்பட்டார். அவரிடம் லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் செய்ய போவது சம்பந்தமாக தெரிவித்தேன். எனவே, எனது தாயார் பெயரில் மின் இணைப்பு மாற்றம் செய்ய என்னிடம் லஞ்சம் கேட்கும் விக்கிரமங்கலம் AE திரு.குணசேகரன் அவர்கள் மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், AE திரு.குணசேகரன் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.2,500/- கொண்டு வந்துள்ளேன். இத்துடன், ஆன்லைன் விண்ணப்பத்தின் நகல், ஆதார் அட்டை, வீட்டுப் பத்திரம் எண் 2490/2021, பட்டா, வீட்டு வரி ரசீது ஆகியவற்றின் நகல்களையும் இணைத்துள்ளேன். இப்படிக்கு (ஒ-ம்) **XXXXXX** (மு.முத்துகணேஷ்), 24.3.2023.

Sir, Received the written complaint on 24.03.2023 at 11.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 01/2023 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 11.30 hrs and took up investigation. Sd./-XXXXXX (N. Bharathipriya) 24.03.2023, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr. M. Muthu Ganesh, S/o. Muthaih, 3/120, South Street, Kadupatti, Vadipatti Taluk, Madurai District along with Xerox copies of Online Application for Name transfer, Aadhar Card, Document No.2490/2021 of Sholavanthan Sub-Registrar Office, Patta and House Tax Assessment receipt are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

24-3-23

(N. Bharathipriya)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.